# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

-----

## IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

## Calender Case No. 1 of 2024

**Deposition of witness for** : Pw17

**Name** : P.ராஜேஷ்

**Father's / Husbend Name** :

**Village** :

**Taluk** :

**Calling** :

**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 07th day of August 2025.**

**எதிரிகள் ஆஜர்**

முதல் விசாரணை:

நான் தற்போது தருமபுரி மாவட்டத்தில் சமுகநீதி மற்றும் மனித உரிமை பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022 ம் ஆண்டு பாரூர் காவல் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். வட்ட காவலுக்கு உட்பட்ட நாகரசம்பட்டி காவல் நிலையம் ஆகும். கடந்த 06.05.2022 ம் தேதி 22.30 மணி அளவில் வேலம்பட்டி கிராமத்தை சேர்ந்த கருணாநிதி மனைவி இராஜேஸ்வரி என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்றவாறு அப்போது காவல் நிலைய பொருப்பில் இருந்த உதவி ஆய்வாளர் திரு. சந்துரு குற்ற எண் 91/2022 பிரிவு 147, 148, 294 (b), 323,324 மற்றும் 307 இ.த.ச. பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து மேல் புலன் விசாரணைக்காக வழக்கு

கோப்பை எனது பார்வைக்கு வைத்ததை பார்வையிட்டும். அப்போது இரவு நேரம் என்பதால் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை. மறுநாள் 07.05.2022 ம் தேதி காலை 10 மணிக்கு சம்பவ இடமான இராஜேஸ்வரி வீட்டு அருகே சென்று சாட்சிகள் முத்துமாணிக்கம், பழனி ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்தேன். மேற்படி பார்வை மகஜர் **அ.சா.ஆ. 15** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ. 16** ஆகும். பின்னர் அதே நாளில் 10.30 மணி அளவில் மேற்படி சாட்சிகள் முன்னிலையில் ராமமூர்த்தி தோட்டத்தில் இருந்த இரும்பு ராடு ஒன்றை கைபற்றுதல் மகஜரில் கைபற்றினேன். மேற்படி கைபற்றுதல் மகஜர் **அ.சா.ஆ.17** ஆகும். பின்பு அதே நாளில் மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் 11.30 மணிக்கு சம்பவம் இடமான வேலம்பட்டி அரசு மது பான கடை அருகே மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்தேன். மேற்படி பார்வை மகஜர் **அ.சா.ஆ. 18** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ. 19** ஆகும். பின்பு அதே நாளில் மேற்படி சாட்சிகளின் முன்னிலையில் 13 மணிக்கு சம்பவம் இடமான காவேரிபட்டினம் அரசு மருத்துவமனை சென்று மாதிரி வரைபடம் பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் மேற்படி பார்வை மகஜர் **அ.சா.ஆ. 20** ஆகும். மாதிரி வரைபடம் **அ.சா.ஆ. 21** ஆகும். பின்பு அதே நாளில் சாட்சிகள் இராஜேஸ்வரி, ராணி , பார்வதி, லட்சுமி, லட்சுமி பாலு, செல்வம், லட்சுமி, முனியப்பன், முத்துமாணிக்கம், பழனி ஆகியவர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் கண்ட எதிரிகள் தலைமறைவாக இருந்தும் மான்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன் ஜாமின் பெற்றதால் எதிரிகளை கைது செய்ய இயலவில்லை. பின்னர் 02.06.2022 ம் தேதி சாட்சிகள் கருணாநிதி, முனியம்மாள் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலத்தில் பதிவு செய்தேன். முதல் தவகல் அறிக்கை பதிவு செய்த காவல் உதவி ஆய்வாளர் சந்துரு மற்றும் புகார் வாக்குமூலம் பதிவு செய்த ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயம்பட்ட கருணாநிதி, இராஜேஸ்வரி, ராணி, முனியம்மாள் ஆகியோர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சோமசுந்தரம் காவேரிபட்டினம் அரசு மருத்துவமனை மருத்துவர் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து காயச்சான்றுகள் மற்றும் கருத்துரைகளை 11.07.2022 அன்று பெற்றேன். இவ்வழக்கு சொத்தை படிவம் 91 ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 91 அ.ச.ஆ.22 ஆகும். மேற்படி இரும்பு ராடு ச.பொ.1 ஆகும். சாட்சிகள் மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் உதவி இயக்குனர் குற்றவழக்கு தொடர்வு துறை அவர்களிடம் கருத்துரை பெற்றதின் பேரில் இவ்வழக்கின்

சட்ட பிரிவை பிரிவுகள் 147, 148, 294 (b),323,324 மற்றும் 307 இ.த.ச. என்பதை சட்ட பிரிவுகள் 147,148, 294(b) .323,325, 506 (2) ஆக பிரிவு மாற்றம் செய்து சட்ட பிரிவு மாறுதால் அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.23 ஆகும். இத்துடன் புலன் விசாரணை முடித்து எதிரிகள் மீது மேற் கண்ட சட்ட பிரிவுகள் கீழ் இறுதி அறிக்கை 01.08.2022 ல் தாக்கல் செய்தேன்.

**குறுக்குவிசாரணை**

என்னிடம் காட்டப்படும் சான்று பொருள் அனைத்து இரும்பு கடையிலும் கிடைக்கும் என்றால் சரிதான். மேற்படி சான்று பொருள் இரும்பு ராடு இல்லை என்றாலும் சதுர வடிவ பழுப்பு என்றால் சரியல்ல. சம்பவம் எனது விசாரணையில் 3 வேவ்வேறு இடங்களிலும் இருவேறு காவல் நிலைத்திற்கு பகுதியிலும் நடந்தது என்றால் சரிதான். இரண்டு சம்பவங்கள் நாகரசம்பட்டி காவல் நிலையத்திற்கு உட்பட்ட இடம் என்றால் சரிதான். 3வது சம்பவ இடம் காவேரிபட்டணம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட இடம் என்றால் சரிதான். அவ்வாறு 3 வது சம்பவ இடம் காவேரிபட்டணம் காவல் நிலையத்தின் எல்லைக்கு உட்பட்ட இடத்தின் நடந்திருந்தால் அவர்கள் தான் வழக்கு பதிவு செய்யவேண்டும் என்றால் மேற்படி 2 சம்பவத்தின் தொடர்சிதான் 3 வது சம்பவம் ஆகும். எனக்கு கீழ் புரியும் அதிகாரிகள் நான் சொன்னதின் பேரில் வழக்கு பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. புகாரின் அடிப்படையில் மட்டும் தான் இவ்வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இராஜேஸ்வரி, ராணி, கருணாநிதி, பார்வதி ஆகியோர் ஒரே குடும்பத்தை சார்ந்தவர் என்றால் சரிதான். கருணாநிதிக்கு 2 மனைவிகள் என்றால் சரிதான். ராணி கருணாநிதியின் தம்பி மனைவி என்றால் சரிதான். முனியம்மாள் கருணாநிதியின் தங்கை என சொல்கிறார் என்றால் சரிதான். மேற்படி அனைவரும் ஒரே குடும்பத்தை சார்ந்தவர்கள் என்பதால் காவேரிபட்டிணம் அரசு மருத்துவமனைக்கு சென்று மற்றோரு வழக்கில் உள்ள விஜீயகுமார் என்பவரை நீ இன்னும் சாகவில்லையான என பிரச்சனை செய்தார்கள் என்றால் சரியல்ல. அங்கு நடந்த பிரச்சணைக்காக தான் நான் தவறான முறையில் அவர்களிடம் புகார் வாங்கி குற்றஎண் 91/2022 வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் சரிவர புலன் விசாரணை செய்யாமல் மேற்கண்ட எதிரி கருணாநிதி காப்பாற்றவேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் புகாரின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன இடத்திலும் சாட்சிகளை

விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. நான் சம்பவ இடத்திற்கு செல்லவில்லை என்றாலும், சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றாலும் பார்வை மகஜர்கள் மற்றும் வரைபடங்கள் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல.

ஒம்/- திரு.பா. திருஞானசம்பந்தம். பி.ஏ., பி,எல்.,

சார்பு நீதிபதி,

ஊத்தங்கரை.